**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 195** **நாள் : 09.11.2024**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகரில் புதிதாக கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் மற்றும் ஏகாங்கிபுரத்தில் பல்நோக்குக் கட்டடம் ஆகியவற்றைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு மேயர் மேம்பாட்டு நிதியின் கீழ், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட புதிய வாழைமா நகர், 5வது தெருவில் ரூ.93.25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை இன்று (09.11.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, 74வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட ஏகாங்கிபுரத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அதில் குழந்தைகள் மையத்தினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, திரு. வி. க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. கே. ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**